PHONE No. 85030

ADDR. No. [illegible]

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 148

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF THE D.P.F.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
துண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
துண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: கார்த்திகை 18உ வியாழன் (3—12—53) ★ ★ ★ வெளியீடு: கார்த்திகை 19உ வெள்ளி (4—12—53)

தூத்துக்குடி சதி வழக்கு:

"போலீசார் சொல்லச் சொன்னதால் நான் அவ்வாறு கூறினேன்"

(0)

"இன்ஸ்பெக்டர் சொன்னபடி பெயர்களைச் சொல்லி சுட்டிக் காட்டினேன்"

"அந்தப் பக்கம் வந்து போனதைத் தவிர நான் வேறேதும் நடப்பதை பார்க்கவில்லை"

சர்க்கார் தரப்பு 2-வது சாட்சியின் வாக்குமூலம்

"......ஒரு பெரிய கூட்டம் கிழக்குப்புறமிருந்து வருவதைப் பார்த்தேன். ஆபீசாது வீடு, பெருமாள் கோயிலுக்கு வடக்குப்புறமிருக்கிறது. நான் காம்பவுண்டு சுவரின் இரும்புக் கதவுகளை மூடினேன். அதனை மூடினாலும் அதற்குள்ளிருந்து தெருவில் நடப்பதை ஒருவர் பார்க்கக் கூடும். கிழக்குப்புறமிருந்து 10 அல்லது 20 பேர் கொண்ட கூட்டம் மேற்கு திசை நோக்கிப் போவதைப் பார்த்தேன். நான் காலை 10-30 மணிக்கு வீட்டிற்குப் போனேன். இடை நேரத்தில், கூட்டம் அந்தப்புறம் வந்துபோவதைத் தவிர நான் வேறு எதுவும் நடப்பதைப் பார்க்கவில்லை."

"சில நாட்கள் கழித்து போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் என்னை தூத்துக்குடி சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டிற்கு அழைத்துப்போனார். அங்கு 3 அல்லது 4 பேர்களிருந்தார்கள். அவர்களை அடையாளம் காட்டி அவர்களது பெயர் என்னவென்று சொல்லவேண்டுமென சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னைக் கேட்டார். நான் அந்த நபர்களை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சொன்னபடி பெயர்களைச் சொல்லி அவர்களைச் சுட்டிக் காட்டினேன்."

"......ஜாமீனில் வெளியிலிருக்கும் எதிரிகளில் சிலரது தூண்டுதலால் நான் பொய் சாட்சி சொல்லுகிறேன் என்று சொல்லுவது சரியல்ல."

"தூத்துக்குடி சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் என்னால் அடையாளங் காட்டப்பட்டவர்களைத் தற்போது என்னால் அடையாளங் காட்டவோ, அன்றி சுட்டிக்காட்டவோ முடியாது."

"......நான் மேலே சொன்னதுபோல சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை எதிரிகளில் சிலர் கூட்டத்தில் இருந்ததாகக்கூறி சுட்டிக் காட்டும்படி என்னை வற்புறுத்தினர்."

"......அந்த வாசகச்சாலை, கருஞ்சட்டைக்காரர்களுக்குச் சொந்தமானதென்று எனக்குத் தெரியாது; போலீசார் சொல்லச் சொன்னதால் நான் அவ்வாறு கூறினேன்."

—இவ்வாறு, தூத்துக்குடி சதிவழக்கில், போலீஸ் தரப்பு 2-வது சாட்சியான தங்கப்பாண்டியத் தேவர், விசாரணையின்போது கூறினார்.

(3-ம் பக்கம் பார்க்கவும்)

ஷேக் அப்துல்லா காவல் நீடிப்பு

ஜம்மு, டிச. 2—
காஷ்மீரின் முன்னாள் பிரதமர் ஷேக் அப்துல்லா, முன்னாள் ரெவினியூ மந்திரி மிர்சா அப்ஸெல்பெக் இவ்விருவரையும் காவலில் வைத்திருக்கும் உத்தரவு மேலும் இரண்டு மாதம் நீடிக்கப்பட்டிருக்கிறது.

பாக்-அமெரிக்கா பேச்சு

ரஷ்யா விளக்கம் கேட்கிறது

லண்டன், டிச. 1—
பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு ரஷ்யா அனுப்பியுள்ள குறிப்பு ஒன்றின் வாசகத்தை சோவியத்தின் அதிகார பூர்வமான செய்தி ஸ்தாபனமாகிய 'டாஸ்' வெளியிட்டிருக்கிறது.

பாகிஸ்தானில் அமெரிக்கத் தளங்களை நிறுவுவதின் பொருட்டு, அமெரிக்காவுக்கும்—பாகிஸ்தானுக்குமிடையே நடைபெற்று வருவதாகக் கூறப்படும் ஒப்பந்தப் பேச்சுகளை இக்குறிப்பு எதிர்க்கிறது.

பாக்-ஸ்தானுக்குள் விமானத் தளங்களை அமைக்க அமெரிக்காவுக்கு இடமளிக்க திட்டமிட்டிருப்பதாக வெளிவந்துள்ள செய்திகளுக்கு பாகிஸ்தானை சோவியத் அரசாங்கம் விளக்கம் கேட்டிருக்கிறது.

ஆனால் இன்று வானொலி மூலம் பேசிய பாக்-முதலமைச்சர் முகமதலி, இதுபற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை.

சென்ற ஆண்டில், தனிகளின் மீது விதிக்கப்பட்ட மகசூல் வரியின்மூலம் சுமார் 13 21 லட்சம் ரூபாய் வருமானமிருக்கிறது.

இலங்கை பிரதமர் கொத்தலவாலா

கொழும்பு, டிச. 2—
இந்திய—இலங்கை சிக்கல்களை குறித்து, இந்தியத் தலைமை அமைச்சர் நேருவுடன் விவாதிக்க ஜனவரி 15-ம் தேதியன்று இலங்கை பிரதமர் ஜான் கொத்தலவாலா பயணமாவார். நேருவுடன் மூன்று நாட்கள் விவாதம் நடத்துவார்.

கல்லக்குடி அறப்போர் வழக்கு

தோழர்கள்மீது குற்றப் பத்திரிகை

திருச்சி, நவ. 30—
இன்று திருச்சி சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் திரு. கே. பி. இ. இராதாகிருஷ்ண மேனன், கல்லக்குடி போராட்ட வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். அவர் கீழ்க்கண்டவாறு குற்றப் பத்திரிகை வாசித்தார்:—

1 முதல் 24 முடிய எல்லா எதிரிகளும் இ. பி. கோ. 147-வது சட்டப்படி குற்றவாளிகள் எனவும்; 9, 13, 17 18, 22, 23, 24-வது எதிரிகள் இ. பி. கோ. 332-வது சட்டப்படி குற்றவாளிகள் எனவும்; 1 முதல் 8, 10, 11, 12 14, 15, 16, 19, 20, 21 ஆகிய எதிரிகள் இ. பி. கோ. 332 பிரிவுகளுடன் சேர்ந்த 149-வது சட்டப்படி குற்றவாளிகள் எனவும்; 1 முதல் 11, 14, 16, 17, 18 முதல் 21 ஆகிய எதிரிகள் ரயில்வே சட்டம் 128-வது பிரிவுப்படி குற்றவாளிகள் எனவும், குற்றச்சாட்டுப் பத்திரிகை வாசித்தார்.

எல்லா எதிரிகளும், தாங்கள் குற்றவாளிகள் அல்லவென்றும், சர்க்கார் சாட்சிகளை மறுபடியும் குறுக்கு விசாரணை செய்யவேண்டுமென்றும் கூறினர்.

நீதிபதி 1 முதல் 5-வது சர்க்கார் சாட்சிகளை எதிரிகளின் வேண்டுகோளின்படி மீண்டும் குறுக்கு விசாரணை

(தொடர்ச்சி 1-ம் கலம் பார்க்க)

பிரிட்டனில் மாபெரும் வேலை நிறுத்தம்

லண்டன், டிச 2—
பிரிட்டனிலுள்ள 5,000 கப்பல் கட்டும் தொழிற்சாலைகளில் சில நீங்கலாக பாகி எல்லாவற்றிலும் இன்று வேலை நடைபெறவில்லை.

சம்பள உயர்வு கோரி 20 லட்சம் தொழிலாளர்கள் இன்று ஒரு நாள் 'ஸ்ட்ரைக்' செய்தனர். 15 சத விகித உயர்வு கோரிக்கையை முதலாளிகள் நிராகரித்ததை ஆட்சேபித்தே ஸ்ட்ரைக் செய்யப்பட்டது.

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)
செய்ய 14-12-53-ம் தேதிக்கும், 6 முதல் 13, 24, 25, 26-வது சர்க்கார் சாட்சிகளை மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய 15—12—53-ம் தேதிக்கும் வழக்கை ஒத்தி வைத்தார்.

சென்னை கடற்கரையில் தி. மு. கழகத் தலைவர்களுக்கு நடந்த வரவேற்பின்போது எடுத்த படம்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 3—12—1953 வியாழன்

சிந்திக்கத்தக்கது!

இந்தியத் துணைக்கண்டத்து மக்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியால் பெற்ற விளைவுகளில் நன்மைகளும் உண்டு தீமைகளும் உண்டு. எது கூடுதல், எது குறைவு என்ற ஆராய்ச்சி இந்தத் தருணத்தில் பொருளற்றதாகும்.

தனது ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொள்வதும் நீண்ட காலத்துக்கு நிலைத்து இருக்கும் முறையில் கெட்டிப்படுத்திக் கொள்வதும்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் குறிக்கோள் என்பதில் எவருக்கும் ஐயமிருக்க நியாயம் கிடையாது. இந்த மூலக் கருத்துக்கேற்ப இந்தியத் துணைக்கண்டத்தை பல மாநிலங்களாகப் பிரித்து ஏகாதிபத்தியம் ஆட்சி புரிந்து வந்தது.

மாநில அமைப்புக்கு நிர்வாகச் சுயநலத்தைத்தான் வெள்ளை ஏகாதிபத்தியம் வழிகாட்டியாகக் கொண்டதேயல்லாது அம்மாநில மக்களின் மொழி நலனையோ, இன நலனையோ, பிற இன்றியமையாத நலன்களையோ சிறந்த நோக்கமாகக் கொள்ளவில்லை. எனவே, பல மொழியினரை ஒன்றுபடுத்தி மாநிலங்களை உருவாக்கி, நிர்வாகத்தைச் சுலபமாக்கித் தனது சுரண்டல் கொள்கையைத் திறமையாக நடத்திவந்தது ஏகாதிபத்தியம். இதை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததுதான், 'பலம் பொருந்திய மத்திய சர்க்கார்' என்ற ஏற்பாடும். அரசியலில் அரிச்சுவடி அறிந்தவர்களும் அறிவார், இந்த உண்மையை.

இந்த மாநில அமைப்பு முறை இந்தியத் துணைக்கண்டத்துக்குப் பொருந்தாது. இவைகளை, மொழியை அடிப்படையாகக் கொண்ட மொழிவழி மாநிலங்களாகத் திருத்தி அமைத்தாக வேண்டும் என்று அகில இந்திய காங்கிரஸ், தனது உயர்ந்த கோட்பாடுகளில் ஒன்றாகப் பல ஆண்டுகளாகக் கொண்டிருந்தது. இந்த முறையைக் கருத்தில் கொண்டே காங்கிரசும் தனது வட்ட அமைப்புகளை மொழிவழியில் ஏற்படுத்திக்கொண்டு இயங்கிவந்தது. இன்றும் இதே நடைமுறையில்தான் காங்கிரஸ் இயங்கிவருகிறது.

வெள்ளையர் வெளியேறி இந்தியத் துணைக்கண்டத்தின் ஆட்சிப் பொறுப்பில் தான் அமர்ந்ததும், மொழிவழி மாநில ஏற்பாட்டை நிறைவேற்ற காங்கிரஸ் தயக்கம் காட்டுகிறது. திட்டவட்டமாக மொழிவழி முறை அறவே கூடாது என்றும், முன்னுள் வாக்குறுதியை மறந்து முரண்பட்ட போக்கைப் பிடிவாதம் காட்டுகிறது. ஏகாதிபத்தியம் காலி செய்த இடத்தைக் காங்கிரஸ் நிரப்பினதால் ஏற்பட்டுவிட்ட தீர்க்கமுடியாத கோளாறு போலும், இது!

டெல்லியின் பிடிவாதம் ஆந்திர மொழியினரிடம் பலிக்கவில்லை. ஆந்திரரின் அடம், டெல்லி ஆட்சி பீடத்தை பணியவைத்து விட்டது. ஆந்திர மாநிலம் உருவாகிவிட்டது.

ஏற்கனவே சென்னை மாநிலத்தில், சிறப்பாக, திராவிட மொழியினர் நால்வர் ஒன்றுபடுத்தப்பட்டு இருந்தனர். ஆந்திரர் பிரிந்து சென்றதும், இன்று மூன்று மொழியினர் எஞ்சியுள்ளனர், இந்த மூன்று மொழியினரும் நட்பு முறையில் பிரிந்து செல்வது மூன்று மொழியினருக்கும் நலம் பயக்கக் கூடியதேயாகும். தங்கள் தங்கள் மொழியினை ஆட்சி மொழியாக ஆக்கிக் கொள்ள நல்லதோர் வாய்ப்பு, அதனால் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. மொழிவழி ஏற்பாட்டில் வேறு சில நன்மைகளும் உண்டாகக் கூடும் என்பதை, எவரும் மறுக்கமாட்டார்கள். ஆனால், பிடி தொலைவில் உள்ள டெல்லியின் கொடிய கரங்களில் இருக்கிற வரையில், பெறுதற்கரிய நலன்கள் அனைத்தையும் மொழிவழிப் பிரிவினையால் பெற்றுவிடக் கூடும் என்பது வெறும் பகற்கனவேயாகும்.

இன்றுள்ள சென்னை சட்டசபையில், திராவிட இன மொழி வந்த மூன்று மொழியைச் சார்ந்தவர்களும் உறுப்பினர்களாக உள்ளனர் என்பது, வெளிப்படையாகத் தெரிகின்ற விஷயம். இந்தச் சூழ்நிலையில், சென்னை மாநிலத்தின் ஆட்சி மொழி தமிழாக இருக்கவேண்டும் என்று பேசுவது, கோண்டை மொழியினரை வம்புக்கு இழுப்பதாகவே முடியும் என்று, நியாயத்தில் நாட்டமுடையவர்கள் கூறினால், அதைப் பொய்யாக்கக் காரணங்கள் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. இப்படிக் கூறுவதால், தமிழ் ஆட்சி மொழியாவதை நாம் விரும்பவில்லை என்று எவரும் கூறத் துணியமாட்டார்கள் என்பதை நாம் அறிவோம். நாம் தமிழ் காதலர்கள், நம்மீது பழி கூற அவர்களுக்குத் துணிவு கிடைக்காது.

தமிழை ஆட்சிமொழியாக்கும் பிரச்னை, இந்தக் காலக் கட்டத்தில் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. நீண்ட சிந்தனைக்குப் பிறகே முடிவு கட்ட வேண்டிய விஷயம்.

மூன்று மொழி கலப்பிலிருந்து, தமிழ் மாநிலம், மொழி வழியில் பிரிந்து தனித்து இயங்கவேண்டும், அதற்கான முயற்சியைத் தீவிரமாக்கவேண்டும் என்று எவர் முன்வருவாரானாலும், அது, இருபாலும் பாராட்டத்தக்கதோடு மட்டுமல்லாமல், வரவேற்று ஆதரிக்கத்தக்கதுமாகும். ஐக்கிய தமிழகம் என்பது, நமது தி.மு. கழக அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்று என்பதை மறந்திருப்பவர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

மொழிவழி மாநில அமைப்பு, நமது திராவிட நாடு கோரிக்கைக்கு, ஒருக்காலும் முரண்பட்டதாகாது. அதற்கு மாறாக அரண் செய்யக் கூடியதேயாகும். பல மொழி பேசும் பல மாநிலங்கள் டெல்லி ஆட்சியில் ஒன்றுபட்டு இருக்க ஒப்பாமல் ஒப்பி இருக்கிற பொழுதும், இது சிறந்த நியாயமாகப் படுகிற பொழுதும், ஒரே இன வழியில் வந்த, திராவிட இன மொழியினரான ஆந்திரரும், கேரளரும், கன்னடரும், தமிழரும் ஒரு மத்திய ஆட்சியின் கீழ் விருப்பத்தோடு ஒன்றுபடுவதற்கு, எது குறுக்கே நிற்கிறது என்பது நமக்குப் புலனாகுமாறு இல்லை.

பல மொழியினர் கொண்ட பல மாநிலங்கள் மத்திய சர்க்காருக்குட்பட்டு இருப்பது நடைமுறைக்கு ஒத்துவரக் கூடியதாக இருக்கும்பொழுது, நான்கே மொழியினர், அதுவும் ஒரே கலாசாரத்தில் உருவானவர், ஒரு மத்திய சர்க்காரை அமைத்துக்கொள்ளுவது எப்படி ஒத்துவராமல் போகுமோ நாம் அறியோம். மொழிவழி மாநில ஏற்பாடு, எந்தவகையிலும் 'திராவிட நாடு' உருவாவதைத் தடுத்து நிறுத்திவிடாது என்பது உண்மையிலும் உண்மையாகும் நிற்க,

இந்தியத் துணைக்கண்டத்தை 'பாரத்' என்று அரசியல் சட்டத்தில் பொறிக்கப்பட்டு இருக்கிறது. இந்தப் புராணப் பெயரை நியாயமென்று ஒப்புக்கொள்ளுகிறவர்களுக்கு, 'திராவிடம்' என்ற வரலாற்றுப் பெயரை ஒப்புக்கொள்ளுவது எட்டிக் கசப்பாக இருக்கிறது. சர்க்கரை கசப்பது சர்க்கரையின் குற்றமல்ல சர்க்கரையை ருசி பார்த்தவரின் சருவிக் கோளாறுதான் அதற்குக் காரணம்!

ஆந்திர மாநிலம் பிரிந்துவிட்டதால், இன்றுள்ள சென்னை மாநிலத்தை எஞ்சிய சென்னை என்று சொல்லிக் கொள்ளத் தேவை இல்லை. இந்தக் காலக் கட்டத்தில சென்னை மாநிலம் என்று சொல்லிக் கொள்ளுவதில் ஏற்பட்டு வருகிற மானக்கேடும் ஒன்றுமில்லை.

பாகிஸ்தான் பகுதியையும் சேர்த்துத்தான் 'இந்தியா' என்று ஏற்கனவே அழைக்கப்பட்டு வந்தது. 'பாகிஸ்தான்' பிரிந்து விட்டதால், 'எஞ்சிய இந்தியா' எனப் பெயரிட வேண்டும் என்று, இதுவரை ஒருவரும் வாதிடக் காணோம். இந்தியா என்றுதான், இந்த எஞ்சியப் பகுதியையும் சொல்லி வருகிறார்கள்

அயர்லாந்திலும் அல்ஸ்டர் என்று வழங்கப்படும் வட அயர்லாந்து தனித்துப் பிரிந்து இருக்கிறது. அல்ஸ்டர் பிரிந்திருக்கிற காரணத்துக்காக, மற்ற பகுதியைத் தென் அயர்லாந்து என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால், அப்படிச் சொல்லப்படுவதில்லை. அயர்லாந்து என்றுதான் இப்பொழுதும் சொல்லப்படுகிறது.

சென்னையையும், ஆந்திரர் போய்விட்டதால் 'எஞ்சிய சென்னை மாநிலம்' என்று சொல்லத் தேவை இல்லை சென்னை மாநிலம் என்றே சொல்லிக்கொள்ளுவதில் நியாயமும் இருக்கிறது, அவசியமும் இருக்கிறது.

இவ்வளவும் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது; அவசரப்பட்டு முடிவிற்கு வரக்கூடாதது என்று அறிவித்துக் கொள்ளுகிறோம்.

'விபசாரி, காதலர்களை மாற்றுவது - - போன்ற பேரரசுகளின் போக்கு!'

—(0)—

பர்மா பிரதமர் தரும் பேரரசுகளின் குண விளக்கம்!

ரங்கூன், டிச. 2—

"தங்களுடைய தன்னலத்துக்கு முரண்படுவதாக இருந்தால், தங்களுடைய குறிக்கோள்களை விட்டொழிப்பதற்கு அவர்கள் வெட்கப்படுவதில்லை; இலகுவாகவும். விரைவாகவும் தங்களுடைய முடிவுகளை ஒதுக்கி வைக்கவும், ஒலிகளை மாற்றிக் கொள்ளவும் அவர்கள் தயங்குவதில்லை. இது எப்படி இருக்கிறது என்றால், ஒரு விபசாரி தன்னுடைய காதலர்களை மாற்றிக் கொள்வதுபோல் இருக்கிறது"

—இவ்வாறு பர்மா பிரதமர் யு-நூ இன்று இரவு, அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் ஆகிய பேரரசுகளின் வெளிநாட்டுக் கொள்கையைக் குறித்துக் குறிப்பிட்டுப் பேசினார்.

அவர்களுடைய கொள்கை தன்னலம் கொண்டது என்றும், இந்த மூன்று நாடுகளும 'உலகத்தைத் தங்கள் படியில கொண்டுவர தங்கள் பலத்தைப் பெருக்கிக் கொள்ளுகிறது' என்றும் அவர் கூறினார்.

5 000 மாணவர்கள் திரண்டிருந்த கூட்டத்தில் பிரதமர் பேசும்போது, பொதுவுடைமை, பொதுவுடைமை எதிர்ப்பு என்று மூன்று பேரரசுகளும் இரு அணியாகப் பிளவுபட்டு, மக்களாட்சி முறையில் தங்களுக்கு அக்கறை இருப்பதாகவும், மனித உயர்வும், ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விடுதலை பெறுவதும் தங்களுடைய குறிக்கோள் என்று எவ்வளவு பகட்டாக இவர்கள் கூறிவந்தபோதிலும், அவைகளனைத்தும் சொல்லளவில்தான் உள்ளது என்றும், ஆனால் செயலிலோ மேலெடுத்துக் காட்டியுள்ளதுபோல் இருக்கிறது என்றும் பிரதமர் யு-நூ குறிப்பிட்டார்.

நாச்சியார் களவாடப்பட்டாள்!

திருப்பதி, டிச 1—

வெங்கடேசப் பெருமாள் கருப்பக்கிருகத்தில் இருந்த உடைய நாச்சியாரின் தங்கக் கை மூடி கொஞ்சம் களவாடப்பட்டு இருக்கிறது அதன் மதிப்பு சுமார் 500 ரூபாய் இருக்கும் என்று தெரிகிறது

ஆசிரியரை மாணவர்கள் கடத்திச் சென்றனர்!

ரங்கூன், நவ. 28—

அக்யாப் நகரில் உள்ள உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியரான யு-சென் அலாங் என்பவரை, பர்மா சர்க்கார் வேறு ஒரு ஊருக்கு மாற்றிவிட்டது அவரும் தயாராகி, விமான நிலையத்துக்குச் சென்றார்

விமான நிலையத்தில் அவரை வழியனுப்ப சுமார் 500 மாணவர்கள் வந்திருந்தனர். அவர் தங்களை விட்டுப் பிரிந்து செல்வதை மாணவர்கள் விரும்பவில்லை. எனவே, தலைமை ஆசிரியரைக் கடத்திச் சென்றனர், மாணவர்கள்!

ஐந்து ஆண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டு காலத்தில், மத்திய சர்க்கார், மாநில சர்க்கார்களுக்குக் கடனாகவும், மானியமாகவும் மொத்தம் 277 கோடி ரூபாய் அளித்துள்ளனர்.

கைலாசநாதர் கள்வரிடம் சிக்கினார்!

குற்றாலம், டிச. 2—

இங்கிருந்து ஆறு கல் தொலைவில் உள்ள கோடர் கிராமத்திலிருக்கும் கைலாசநாதர் கோயிலுக்குள் பூட்டை உடைத்துக்கொண்டு சிலர் நுழைந்து சில வெண்கலச் சிலைகளையும், செம்புப் பித்தளைப் பாத்திரங்களையும் களவாடிச் சென்றுவிட்டார்கள்.

கட்டுப்பாடு முறையில் மோசடி

ஆர். சாரி தண்டிக்கப்பட்டார்

கான்பூர், டிச. 2—

உ. பி.யைச் சேர்ந்த ஒரு பகுதியில் மத்திய சர்க்காரின் இரும்பு டிபுடி கண்ட்ரோலராக இருந்த திரு. ஆர். சாரி என்பவரை சர்க்கார் தஸ்தாவேஜுகளில் பற்பல மோசடிகள் செய்ததாக பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் குற்றம் சாட்டப்பட்டு நடைபெற்ற வழக்கில் கான்பூர் அடிஷனல் செஷன்ஸ் ஜட்ஜ் அவருக்கு 4 ஆண்டு கடுங்காவலும் ரூ. 20 அபராதமும் விதித்தார்

சாரியின் குமாஸ்தாவுக்கும், 3 ஆண்டு தண்டனையும், ரூ 5,000 அபராதமும் விதிக்கப்பட்டது.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி

தூத்துக்குடி நிதிக்கு செங்கற்பட்டு மாவட்டத்தின் சார்பில் ரூ 2,000 தருவதாக மாவட்ட செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை ஒப்புக்கொண்டார். அந்த ரூ. 2,000-மும், தூத்துக்குடி நிதிப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னரே அதன் விபரம் வெளியிடப்பெறும்.

★

காஞ்சிபுரம் வரவேற்புக் கூட்டத்தில் தூத்துக்குடி நிதிக்கென உண்டியல் மூலம் வசூலான தொகையும், கிளைக் கழகங்கள், தனிப்பட்டவர் மூலமாக வந்த தொகையும் மாவட்ட செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் வசமே உள்ளது.

★

தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்கு பணம் அனுப்ப விரும்பும் செங்கல்பட்டு மாவட்டத் தோழர்கள் 'சி. வி. எம். அண்ணாமலை, செங்கழுநீரோடைத்தெரு, காஞ்சிபுரம்,' என்ற முகவரிக்கு அனுப்பக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

★

செங்கற்பட்டு மாவட்டத்தைப் பின்பற்றி, எல்லா மாவட்டங்களும் நிதி திரட்டி தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்கு ஆயிரக்கணக்கில் தந்துதவும்படி நிதிப் பொறுப்பாளர் கேட்டுக் கொள்கிறார்.

"புதிய தொடக்கக் கல்வி நடைமுறைக்கு ஒத்துவராதது"

—(✶)—

'பாருலேகர் யோசனையை வெற்றியாக்க நிறையப் பணம் வேண்டும்'

'சிற்றூர் மக்களின் வறுமையே கல்வி பெறுவோர் பெருகாததற்குக் காரணம்'

தெ. இ. ஆ. ச. தலைவரின் ஆணித்தரமான கண்டனம்

திருப்பூர், நவ. 30—

"சென்னை சர்க்காரால் புகுத்தப்பட்டுள்ள புதிய தொடக்கக் கல்வித் திட்டம், செயல்படுத்தத் தகுதியற்றதாகும். பாருலேகர் ஆலோசனைகளை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமானால், சென்னை அரசியலார் பெருந்தொகையைச் செலவிட முன்வர வேண்டும்."

"ஆசிரியர்கள் இப்பொழுது பெறும் ஊதியம் மிகமிகக் குறைவாக இருப்பதால், அவர்கள் நிலையையும் உயர்த்த வேண்டும்."

"மக்களின் வறுமை காரணமாக சிற்றூர் பள்ளிகளில் கல்விபெறும் சிலர் எண்ணிக்கைக் குறைந்துபோய் இருக்கிறது. கட்டாயத் தொடக்கக் கல்வியை நடைமுறைக்குக் கொண்டுவர அரசியலார் விரும்புவதானால், மக்களின் பொருள் வளத்தைப் பெருக்க முயற்சிக்க வேண்டும்."

"இப்போதுள்ள பாடமுறை மாற்றப்பட வேண்டும். இந்தப் பொறுப்பை, கல்வித் துறையில் உள்ள கல்வியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும். இவ்வளவு ஏற்பட்டுக்குப் பிறகுதான், புதிய திட்டம் வெற்றி பெறுவதற்கு ஒருக்கால் வாய்ப்பு இருக்கும்."

—கோவை மாவட்ட ஆசிரியர் குழுவின் ஆண்டு விழா, சேரன் நஞ்சப்பா உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. அதற்குத் தலைமை வகித்த தென்னிந்திய ஆசிரியர் சங்கத் தலைவர் எஸ். நடராசன் அவர்கள், மேற்குறித்தவாறு தனது சொற்பொழிவில் குறிப்பிட்டார்

ஆச்சாரியாருக்கு ஆதரவு திரட்டும் இலட்சணம்!

திருநெல்வேலி டிச. 2—

ஆச்சாரியாருக்கு எதிராக நெல்லை மாவட்டத்தில் 14 சட்ட சபை உறுப்பினர்கள் கையொப்பமிட்டிருக்கிறார்கள். இம்மாவட்டத்தின் மொத்த உறுப்பினர்கள் 18 பேர்; எதிராகக் கையெழுத்துப் போட்ட 14 உறுப்பினர்களில் 8 பேரிடம், ஆச்சாரியாரின் ஆதரவாளர்கள், பலவந்தமாகத் தங்கள் மனுவில் கையெழுத்து வாங்கினார்கள். பலவந்தப்படுத்தப்பட்ட 8 பேரில் இதுவரை 5 பேர் தங்களிடம் பலவந்தமாக ஆதரவாளர்கள் கையெழுத்து வாங்கியதாகவும், அது செல்லாதென்றும் ஆச்சாரியாருக்குத் தந்தி கொடுத்திருக்கிறார்கள். எஞ்சியவர்களும் அதுபோன்றே தந்தி கொடுப்பார்களெனத் தெரிகிறது.

பெரியார் வழக்கு

திருச்சி மாவட்ட செஷன்ஸ் நீதிபதி திரு என். டி. கிருஷ்ணராவ் 27—11—53-ம் தேதி பெரியார் ஈ. வெ. ரா. மீதுள்ள வழக்கை 12—12—53-ம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளார்

"சட்ட மூலம் தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும்"

சேலத்தில் கஜபதியார் பேச்சு

சேலம், டிச. 1—

25—11—53-ல் தேசியன்று சேலம் உயர்நிலைப் பள்ளியில் டாக்டர் சுமுவேரம் தலைமையில் ஆ. கஜபதி நாயகர் எம்.எல்.ஏ. பேசினார். அதுபோது அவர் இந்திய அரசியல் சட்ட அமைப்பில் கண்ட பிரிவுகள் 345, 346, 347, 348 இவைகளுக்கு விளக்கம் கூறி, தமிழ்மொழி ஆட்சிபெற வேண்டுமானால், சென்னை சட்டசபையில் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக ஆக்க சட்டம் ஒன்று கொணர்ந்து அதை நிறைவேற்றுவதல்லாது வேறு வழியில் வெற்றிபெற முடியாதென்றார்.

தமிழ்மொழி, நம் நாட்டின் உயர்நீதி மன்றத்தில் ஆட்சிபெற வேண்டுமானால், முதன் முதலாக அரசியல் சட்டம் 345-ன் படி சட்டசபையில் ஆட்சிமொழியாக சட்டமாய் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்; இன்றேல், ஏமாந்து விடுவோம்.

"உடனடியாக அரசியல் சட்டம் 345-ன்படி தமிழ்மொழியை ஆட்சி மொழியாக்க வேண்டும்," எனப் பேசி முடித்தார்.

கோவையில்

5—12—53 இரவு 9-மணிக்கு தோழர் கருணாநிதிக்கு வரவேற்பு, அவர் தலைமையில், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி குழுவினரின் 'காதல் ஜோதி' நாடகமும் சண்முகம் தியேட்டரில் நடைபெறும்.

6—12—53 இரவு 10 மணிக்கு சண்முகம் தியேட்டரில், அண்ணாதுரை தலைமையில், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி குழுவினரின் 'ஜமீன் மாளிகை' நாடகம் நடைபெறும் நாடகத்தினிடையில், தூத்துக்குடி வழக்கு நிதிக்கு அண்ணாதுரையிடம் நிதி அளிக்கப்படும்.

5—12—53 காலை 8 மணிக்கு தோழர் கருணாநிதியை புகைவண்டி நிலையத்திலிருந்து வரவேற்று நகரின் முக்கிய தெருக்களின் வழியாக ஊர்வலமாக அழைத்து வரப்படும்.

6—12—53 மாலை 6 மணிக்கு பொதுச் செயலாளர் அண்ணாதுரை, ஈ. வெ. கி. சம்பத் பேசுவார்.

★

உதகமண்டலம்

24—1—54 ஞாயிறு அன்று, உதகமண்டலத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் மு. கருணாநிதி, என். எஸ். இளங்கோ, கலந்து கொள்ள சம்மதித்திருப்பதாக சிதம்பரம் சி. எஸ். சடகோபன் அறிவிக்கிறார்.

ஆச்சாரியார் திருவாங்கூர் செல்வார்

சென்னை, டிச. 3—

திருவாங்கூர் — கொச்சியில் தேர்தல் பிரசாரம் நடத்த, சி. ஆர். அந்த ராஜ்யத்திற்குச் செல்லவேண்டுமென அங்குள்ள காங்கிரஸ் கமிட்டி கேட்டுக்கொண்டிருக்கிறது. பண்டித நேரு, ஜனவரி மாதக் கடைசியில் அங்கு செல்லவிருக்கிறார்.

* * *

ஆச்சாரியாரை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் காமராஜ் நாடார் சந்தித்தார். சமரசம் ஏற்பட்டு விடும் என்று கருதப்படுகிறது.

• • •

ஆச்சாரியாரை காரியக்கமிட்டி கூட்டத்திற்கு வரும்படி நேரு அழைத்திருக்கிறார். அவர், 4-ம் தேதியன்று டில்லி செல்கிறார்.

நாக நாடு கோரிக்கை

அமைச்சரை தூதுக்குழு சந்தித்தது

இம்பால், டிச. 1—

நாகர் தேசிய குழுவினைச் சேர்ந்த, 11 உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் நேற்றிரவு இந்திய அரசாங்க அமைச்சர் ராஜகுமாரி அமிர்தகவுரியை இங்கு பேட்டி கண்டனர். இத் தூதுக்குழுவில் 3 பெண்களும் அங்கம் வகித்தனர்.

நாகமலைப் பகுதியில் நடைபெறும் நாகநாட்டு இயக்கம் பற்றிய செய்திகளை தூதுக்குழுவினர் அமைச்சருடன் விவாதித்தனர்.

'நான் பார்ப்பன சங்கத்தின் துணைத் தலைவனா?'

திருச்சி, டிச. 2—

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படும், திருச்சி பார்ப்பன சங்கத்தின் துணைத் தலைவராக தேசியக் கல்லூரி பிரின்சிபால் எஸ். தோதாத்திரி அய்யங்காரை நியமிக்கப்பட்டிருக்கிறது என்றும் ஏற்கனவே ஒரு செய்தி பத்திரிகைகளில் வந்தது. அந்தச் செய்தியைக் கண்ட அய்யங்கார், இது வெறும் 'செய்தி' யாகவே இருப்பதாகவும், இது பற்றி தம்மை யாரும் கேட்கவில்லை, தமது அனுமதியைப் பெற்றது கிடையாது என்றும், ஒரு சங்கத்திற்கு நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதற்குதவர்களிடம் அறிவிக்காமலும், ஒப்பம் பெறாமலும் செயலாற்றுவது விசித்திரமாகத்தான் இருக்கிறது என்று அய்யங்கார் குறிப்பிடுகிறார்.

தேவையா?

30—11—53-ல், சென்னையில் நடைபெற்ற "ஐயா வரவேற்பு" விழாவின்போது எடுக்கப்பட்ட தலைவர்களின் பொதுக்கூட்ட நிழ்ச்சிப் புகைப்படங்கள் வேண்டுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்க;—

என். முத்து ஸ்டுடியோ,
59, அரண்மனைக்காரத் தெரு,
மண்ணடி, சென்னை-1.

விற்பனையாகிறது!

திராவிடமே திரும்பிப் பார்!

விலை 6 அணா

முன் பணமின்றி பிரதிகளை அனுப்ப இயலாது

விவரங்கட்கு:
சித்ரா அண்ட் கோ., சென்னை-10

தூத்துக்குடி சதி வழக்கு:

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருநெல்வேலி, டிச. 1—

இன்று ஸ்பெஷல் அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. எஸ். அரிகர அய்யர் முன்பு தூத்துக்குடி சதிவழக்கு விசாரிக்கப்பட்டது.

பிராஸிகூஷன் தரப்பு 2-வது சாட்சியாக திரு. தங்கப்பாண்டியத் தேவர் விசாரிக்கப்பட்டார் அவர் கூறியதாவது:—

"நான் தூத்துக்குடியில் வசித்து வருகிறேன். 5 மாதங்களுக்கு முன்பு தூத்துக்குடி வெளிநாடு செல்வோர் ரட்சகர் ஆபீஸில் வேலை பார்த்தேன் — 2 மாதங்களே வேலை பார்த்தேன் 5 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு 9 மணிக்கு நான் காரைப்பேட்டை தெருவுக்கு அருகிலுள்ள குப்பம்மாள் ஹோட்டலுக்குச் சென்றேன். ஹோட்டலுக்கு எதிரில்தான் நாகம்மாள் வாசகசாலை இருக்கிறது. இந்த வாசகசாலை கருஞ் சட்டையினருடையது. நான் அன்று ஹோட்டலுக்குச் சென்றபோது வாசகசாலைக்கு எதிரே ஒரு கூட்டத்தைப் பார்த்தேன் ஜனங்கள் வாசகசாலைக்குள் வருவதும் போவதுமாக இருந்தார்கள்; அங்கு எவ்வளவுபேர் இருந்தனர் என்று என்னால் சொல்ல இயலாது. நான் வாசகசாலைக்கு எதிரில் நின்று கூட்டத்தைக் கவனித்தேன். பிறகு நான் வீடு சென்று சாப்பிட்டேன்.

"மறுநாள் காலை 9 மணிக்கு நான் புதுக் கிராமத்திலுள்ள கண்டம்மை இலாகா குப்பரிடம் சென்றேன். எனக்கு அந்த ஆபீஸரைத் தெரியும் அவர் வீட்டில் இல்லை. அப்போது தெருவில் சப்தம் கேட்டது.

"ஒரு பெரிய கூட்டம் கிழக்குப் புறமிருந்து வருவதைப் பார்த்தேன். ஆபீஸரது வீடு பெருமாள் கோவிலுக்கு வடக்குப் புறமிருக்கிறது நான் காம்பவுண்டு சுவரின் இரும்புக் கேட்டை மூடினேன் அதை மூடினாலும் அதற்குள்ளிருந்து தெருவில் நடப்பதை ஒருவர் பார்க்கக்கூடும் கிழக்குப்புறமிருந்து 10 அல்லது 20 பேர் கொண்ட கூட்டம் மேற்கு திசை நோக்கிப் போவதைப் பார்த்தேன்.

"நான் காலை 10-30 மணிக்குத்தான் வீட்டிற்குப் போனேன். இடை நேரத்தில் கூட்டம் அந்தப்புறம் வந்து போவதைத் தவிர நான் வேறு எதுவும் நடப்பதைப் பார்க்கவில்லை.

"சில நாட்கள் கழித்து போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் என்னை தூத்துக்குடி சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டிற்கு அழைத்துப் போனார். அங்கு 3 அல்லது 4 பேர்களிருந்தார்கள். அவர்களை அடையாளம் காட்டி அவர்களது பெயர் என்னவென்று சொல்ல வேண்டுமென சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை கேட்டார். நான் அந்த நபர்களை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சொன்னபடி பெயர்களைச் சொல்லி அவர்களைச் சுட்டிக் காட்டினேன்

"இச்சமயத்தில் பப்ளிக் பிராசிகியூட்டர் இந்த சாட்சியை விரோதமாக மாறியவரெனக் கருத கோர்ட்டாரை அனுமதி கேட்டார் கோர்ட்டாரும் அவரை அம்மாதிரி கருத அனுமதி கொடுத்தனர்.

பிறகு விரோதியாக பாவிக்கப்பட்ட இந்த நபர், பப்ளிக் பிராசிகூட்டரின் கேள்விகளுக்கு விடையளிக்கையில் கூறியதாவது:

"நான் தற்போது எமிக்ரேஷன் ஆபீசில் வேலையாக இருக்கவில்லை. நான் தற்சமயம் நாகம்மாள் வாசகசாலை மாடியில் இருப்பதாகக் கூறுவது சரியல்ல நாகம்மாள் வாசகசாலை மாடியில் தான், மறுநாள் ஆரம்பிக்க வேண்டிய வேலை நிறுத்தம் பற்றி முதல் எதிரியும் மற்றவர்களும் விவாதிப்பது வழக்கம்.

"நான் புதுக்கிராமத்திலிருந்தபோது கூட்டத்தினர் இம்பீரியல் பாங்கி கஜான்ஜி திரு. சாமிகுளத்து ஐயர் வீட்டைத் தாக்கினாரா என்பது எனக்குத் தெரியாது."

"நான் தற்போதுகூட தூத்துக்குடியில் வசித்துவருகிறேன் எனக்கு தூத்துக்குடிக்கு வெளியே சொத்திருக்கின்றன "ஜமீனில் வெளியிலிருக்கும் எதிரிகளில் சிலரது தூண்டுதலால் நான் பொய் சாட்சி சொல்லுகிறேன் என்று சொல்வது சரியல்ல" "தூத்துக்குடி சப் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் என்னால அடையாளங் காட்டப்பட்டவர்களைத் தற்போது அடையாளங் காட்டவோ, அன்றி சுட்டிக் காட்டவோ முடியாது"

"இதுவரை நான் எந்த அதிகாரிக்கும் எந்த ரிப்போர்ட்டும் செய்யவில்லை"

"நான் மேலே சொன்னது போல, சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை, எதிரிகளில் சிலர் கூட்டத்தில் இருந்ததாகக்கூறி சுட்டிக் காட்டும்படி என்னை வற்புறுத்தினார்"

எதிர் தரப்பு வக்கீல் திரு. எம். செல்லையப்ப பிள்ளையினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறியதாவது:

"நான் தூத்துக்குடியில் பிறந்தேன். அந்த சமார் 20 வருடங்களாக வசித்து வருகிறேன். எனக்கு நாகம்மாள் வாசகசாலை தெரியும். ஆனால் நான் கட்டடத்திற்குள் ஒருபோதும் போனதில்லை. நான் தெருவிலிருந்தே போர்டைப் பார்த்தேன். வாசகசாலை இருக்கும் காம்பவுண்டில் 10 வீடுகள் இருக்கின்றன. அது குப்பம்மாள் வீட்டிலிருந்து 1 பர்லாங் தூரமிருக்கிறது. இரவு மிக்க இருட்டாக இருந்தது"

'அந்த வாசகசாலை கருஞ் சட்டைக்காரருக்குச் சொந்தமானது என்று எனக்குத் தெரியாது. போலீசார் சொல்லச் சொன்னதால் நான் அவ்வாறு கூறினேன்."

"காம்பவுண்டில் புகையிலை கிடங்கு ஏதேனுமிருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது."

சென்ற ஆண்டில், நம் நாட்டிற்கு விஜயம்செய்த வெளிநாட்டுப் பிரயாணிகளின் மூலம் இந்தியாவுக்குச் சுமார் 45 லட்ச ரூபாய் மதிப்புள்ள டாலர் வருமானம் கிடைத்திருக்கிறது.

தி. மு. கழகக் கூட்டங்கள்

★

பெரியகுளம்

25—11—53 மாலை 5 மணிக்கு வடகரை முன்னேற்ற வாசகசாலையிலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, நகரின் முக்கிய வீதிகள் வழியாக வந்து, பெரியார்—காந்தி திடலில் சேர்ந்தது. ஊர்வலம் வரும்போது, நகரின் முக்கிய 4 இடங்களில், தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்களால் கொடியேற்றப்பட்டது. 6 மணிக்கு பெரியார்—காந்தி திடலில், தோழர் கே. எம். எம். மேத்தா தலைமையில் கூட்டம் துவங்கிற்று. தோழர்கள் பாண்டியன், இளமுருகு, எஸ். முத்து ஆகியோர் பேசியபின், தோழர் கோவிந்தசாமி, எம். எல். ஏ., ஆச்சாரியாரின் ஆட்சி பற்றியும், சட்டசபை நிகழ்ச்சி பற்றியும் விரிவாகப் பேசினார்.

இடைப்பாடி

22-11-53 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு, தி. மு. கழக சார்பில், தோழர் ஆர். வி. பெருமாள் தலைமையில், தோழர்கள் என். எஸ். இளங்கோ, கே. மாரியப்பன் ஆகியோர், திராவிட நாடு பிரியவேண்டிய அவசியத்தையும், தி. மு. கழகம் நடத்திய மும்பெரும் போராட்டங்களையும் விளக்கிப் பேசினார்கள்.

எருமப்பட்டி

27—11—53-ல், தோழர் சாமிதாசன் தலைமையில், தி. மு. கழக சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் தோழர் சி. பி. சிற்றரசு, தி. மு. கழகத்தின் லட்சியத் திட்டங்கள் பற்றி நீண்டதோர் விரிவுரையாற்றினார்.

பொள்ளாச்சி

29—11—53ல், தேர் நிலையில் தோழர் நாராயணன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் பொள்ளாச்சி மாரியப்பன், மதுரை எம். ஆர். கணேசன், ராசமாணிக்கம் ஆகியோர் பேசினர்.

ஜமீன் ஊத்துக்குளி

29—11—53ல், அர்ச்சுனன் மன்ற சார்பில், சி. குப்பமுத்து தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் பி. சி. நடராசு, கு. கா. கிருட்டினசாமி, ஊ. ப. வெங்கட்ராசு, க. நடராசன், ந. சு. மணி, ந. கோ. ராசு மற்றும் பலர் பேசினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

"எவரெஸ்ட் வெற்றி" கோர்ட்டில் தாவா

பாரிஸ், நவ. 30—

"எவரெஸ்ட் வெற்றி" என்ற புத்தகத்தை ஒரு ஷெர்பா எழுதியதாக பிரான்சில் ஒரு புத்தகக் கம்பெனி பிரசுரித்திருக்கிறது. இக்கம்பெனி, காபிரைட் சட்டத்தை மீறியதாக வழக்கு தொடரப்பட்டிருப்பதால், விற்பனையாகும் பணத்தை தீர்ப்பளிக்கப்படும் வரை கோர்ட்டில் கட்டவேண்டுமென்று இடைக்கால உத்திரவு போடப்பட்டிருக்கிறது.

புத்தக அட்டைமீது எவரெஸ்ட் சிகரம் சின்னமாகக் காட்டப்பட்டிருப்பது மாற்றப்படவேண்டுமென்றும், இப்புத்தகத்தை ஷெர்பா டென்சிங் எழுதவில்லையென்று குறிப்பிடவேண்டுமென்றும் கோர்ட் உத்தரவிட்டிருக்கிறது. —ராய்டர்

விளாப்பாக்கம் தி. மு. க. செயற்குழு கூட்டம்

26—11—53-ல், கழகக் கட்டிடத்தில், தி. மு. கழக செயற்குழு கூடி கழகத்தின் வரவு—செலவு கணக்கு ஒப்புக்கொள்ளப்பட்டது.

திருமணங்கள்

தெக்குருப்பு, டிச. 3—

இன்று காலை 8 மணிக்கு தெக்குருப்பு இராஜேந்திர சோழன் இல்லத்தில், தோழர் அ. பிச்சைமுத்துக்கும், தோழியர் பரணிக்கும் திருமணம் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டிப் பலர் பேசினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது — வரப் பெற்றோம்- நன்றியுடையது-பொறுப்பாளர்.

• • •

செம்பவராயநல்லூர், டிச. 3-

"1—12—53-ல், திருவையை அடுத்த செம்பவராயநல்லூரில் (வ. ஆ.) நடந்தேறிய எங்கள் வாழ்க்கை ஒப்பந்தத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1—0—0 அன்போடு அளிக்கிறோம்," என மணமக்கள் கனக—சுப்பிரமணியமும், சரோஜாவும் அறிவிக்கின்றனர்—வரப்பெற்றோம் — நன்றியுடையது—பொறுப்பாளர்.

* * *

பொள்ளாச்சி, நவ. 26—

ரயில் நிறுத்தப் போரில் 2 மாதம் சிறைதண்டனை அடைந்த தோழர் வை. சுப்பிரமணியம்—தோழியர் ராமானுஜத்தையும், தோழியர் பார்வதியை தோழர் கே. சுப்பிரமணியமும், தோழர் வெங்கிடாசலம் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்காக இரு மணமக்களும் ரு 2 அன்பளிப்பாகத் தந்தனர்—வரப்பெற்றோம் —நன்றியுடையது—பொறுப்பாளர்.

* * *

கள்ளக்குறிச்சி, நவ. 30—

கள்ளக்குறிச்சி வட்டத்தைச் சேர்ந்த வீரசோழபுரம் கிராமத்தில் 25—11—53 புதன்கிழமை காலை 9 மணிக்கு ஏ. கே. சிதம்பரம் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. திருந்திய மணத்தின் அவசியம்பற்றி தலைவர் விரிவுரையாற்றினார்.

* * *

உடுமலைப்பேட்டை, நவ 30-

தோழர் சொக்கலிங்கத்திற்கும், தோழியர் சரசுவதிக்கும் (வெஞ்சமடை தி. மு. க. உறுப்பினர்கள்) 26—11—53-ல், தோழர் பெ. குருவன் தலைமையில் திருத்திய திருமணம் நடைபெற்றது. அதுபோது மணமக்களை வாழ்த்தியும், திருத்திய திருமணங்களின் அவசியம் பற்றியும் தோழர்கள் கா. துரை, தி. விசுவநாதன், ச. சொக்கையன், தி. மு. க. செயலாளர் ப. நாராயணன் ஆகியோர் பேசினர்.

★

அனிபா திருமண விழா

இசை முரசு நாகூர் ஹனிபா அவர்களுக்கும், சென்னை வர்த்தகர் ஜனாப் பி. அப்துல் ரஹீம் அவர்களின் புதல்வி ரோஷன் பேகத்துக்கும் 26—11—53-ல். சென்னை மூர் தெருவில் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது பல பிரமுகர்கள் வருகை தந்தனர். பல நண்பர்களால் பரிசுகளும், வாழ்த்துரைகளும் வழங்கப்பட்டன.

மதுரை எஸ். ஹூசைன்தீன், பொதக்குடி அஹமது, கொழும்பு என். எம். முஹம்மது அலி, கும்பகோணம் எ. டி. சுல்தான் ஆகியோரால் அன்றிரவு சிறந்த முறையில் இன்னிசை விருந்தும் நடைபெற்றது.

தம்பதிகள் நன்றியறிவிப்பு

"எங்கள் திருமணத்தின் போது கலந்து கொண்டு சிறப்பித்த நண்பர்களுக்கும், பரிசுகள், வாழ்த்துரைகள், வாழ்த்துத் தந்திகள் நல்கிய நண்பர்களுக்கும், எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக அறிவிக்க முடியாமைபற்றிப் பொறுத்தருள்க."

கழகக் கூட்டங்கள்

★

பாப்பம்பட்டி

5—12—53 சனி மாலை

பேசுபவர்:

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

★

தஞ்சை

தூத்துக்குடி சதி வழக்கு நிதி அளிப்புக் கூட்டம்

6—12—53 ஞாயிறு மாலை 6 மணிக்கு

தலைவர்: எ. வி. பதி

பேச்சாளர்கள்:

மு. கருணாநிதி

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ

கருணாநிதிக்கு திருப்பத்தூர் நகரசபை வரவேற்பு

3—12—53 வியாழன் மாலை 5 மணிக்கு, திருப்பத்தூர் நகரசபையின் சார்பாக, நகராட்சித் தலைவர் வி. எஸ். வீரபத்திரனார் அவர்களால், நகரசபையின் சார்பில், நகரசபை உயர்நிலைப் பள்ளியில் மு. கருணாநிதிக்கு வரவேற்பு இதழ் வாசித்து அளிக்கப்படும்.

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., சுற்றுப்பயணம்

★

டிசம்பர் 5: கோவை

" 6: தஞ்சை

" 12: ஆரணி

" 20: மாயவரம்

" 28: செங்கற்பட்டு

திருமணம்

4—12—53 வெள்ளி அன்று காலை 9-மணிக்கு மேல் 10-30 மணிக்குள்ளாக, இரும்புலியூர் தோழர் பார்த்தசாரதி மகன் தோழர் பா. செயராமனுக்கும், தோழர் பாலகிருட்டினன் அவர்களின் மகள் தோழியர் தனபாக்கியம் அம்மையாருக்கும், தோழர் அ. பொன்னம்பலனார் ('நம் நாடு' பொறுப்பாளர்) அவர்களது தலைமையில குரோம்பேட்டை அடுத்த டி. பி. சானடோரியத்தில், மணமகனது வீடு தியில், தமிழ்த் திருமணம் நடைபெறும். "திருமணம்" என்னும் பொருள் பற்றி தோழர் க. அன்பழகன் எம். ஏ., அவர்கள் பேசுவார்கள்.

எமது நன்றி!

29—11—53 அன்று எழும்பூரில் நடைபெற்ற கருணாநிதி வரவேற்புக் கூட்டத்திலும், 30—11—53 அன்று திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற பொதுச்செயலாளர், மற்றைய தலைவர்கள் வரவேற்புக் கூட்டத்திலும் கலந்துகொண்டு பாராட்டிய கிளைக் கழகங்கள், மன்றங்கள், படிப்பகங்கள், தொழிலாளர் ஸ்தாபனங்கள் மற்றும் உடல் உழைப்புத் தந்த கழகத் தோழர்கள், பொருளுதவி செய்தவர்கள், அமைதி காத்த தொண்டர் படையினர், அனைவருக்கும் நன்றிகூறிக் கொள்கிறேன் என சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் கே. எம். கண்ணபிரான் அறிவிக்கிறார்.

1953 செப்டம்பருடன் முடிந்த ஒன்பது மாத காலத்தில், இந்தியாவில் 270·7 லட்சம் டன் நிலக்கரி உற்பத்தி செய்யப்பட்டது; அதில் 16 2 லட்சம் டன் நிலக்கரி ஏற்றுமதி செய்யப்பட்டது.

"நம் நாடு" ஏஜண்டுத் தோழர்கட்கு

"நம் நாடு" ஏஜண்டுத் தோழர்கட்கு: நவம்பர் மாதப் பில் பாக்கிப் பட்டியல் 1—12—53-ல், அனுப்பியுள்ளோம். முன் பாக்கியுள்ள தோழர்கள் நவம்பர் மாதப் பில் பாக்கியுடன் சேர்த்து 10—12—53-க்குள் இங்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம். 10—12—53-க்குள் பில் பாக்கி ரூபாய் அனுப்பாத தோழர்கட்கு மட்டுமே 'நம் நாடு' அனுப்புவதை நிறுத்தி வைக்கப்படும் ஏஜண்டு ரத்து செய்யப்பட்டு, பாக்கியுள்ள தோழர்களும் இனியும் தாமதம் செய்யாமல் பாக்கி ரூபாய் இங்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

பொறுப்பாளர்: "நம் நாடு"

2—12—'53. இராயபுரம், சென்னை-13.

ஆந்திர அமைச்சர்கள் சம்பளம்

ரூ. 500 ஆகக் குறைந்தது

கர்நூல், டிச. 1—

இன்று ஆந்திர அசெம்பிளியில் சம்பள யோக்கியதாம்ச தடை மசோதா நிறைவேறியது.

மந்திரிகளின் சம்பளத்தை ரூ 1,000-த்திலிருந்து 500 ரூபாயாகக் குறைக்கும்படி சுயேச்சை வி. கோபாலகிருஷ்ணய்யா கொண்டுவந்த திருத்தம் நிறைவேறியது.

இப்போது மந்திரிகளின் சம்பளம் ரூ 500 பிரதம பார்லிமெண்டரி செயலாளரின் சம்பளம் ரூ. 600.

இதுபற்றி தென்னேட்டி விசுவநாதம் பேசுகையில், சம்பளம் பற்றி சர்க்கார் கவலைப்படாதென்றும், மந்திரிகளும் விலகமாட்டார்கள் என்றும் குறிப்பிட்டார்.

ஆந்திரத் தலைநகர்

திருத்தம் நிறைவேறியது

கர்நூல், நவ. 30—

ஆந்திர சட்டசபையில் தலைநகர் பற்றிய அதிகார சார்பற்ற தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்தத் தீர்மானத்தை எம். லட்சுமணதாஸ் கொண்டு வந்தார்.

ஆந்திராவின் தற்காலிகத் தலைநகரை 1956ம் ஆண்டு அக். 1-ம் தேதி வரை கர்நூலில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். பின்பு நிரந்தரத் தலைநகரை விசாகப்பட்டினத்தில் அமைக்கவேண்டும் என்று, அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்கிறது என்பதே அத் தீர்மானம்.

பின்பு, 1956 செப். 1ம் தேதி வரை, தலைநகர், கர்நூலிலேயே இருக்கவேண்டுமென்ற அதிகார சார்பற்ற திருத்தம் சட்டசபைக் கூட்டத்தில் நிறைவேறியது.

அரசாங்கத்தினரும் திருத்தத்தை ஆதரித்தனர்.

அதனை முதலமைச்சர் பேசுகையில், 1955 ஏப்ரலுக்குள் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராகி விடும் என்றார்.

காங்கிரஸ் கரைகிறது!

கள்ளக்குறிச்சி, நவ. 20—

ஜில்லா காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினரும், பிரபலஸ்தருமான செருவங்கூரைச் சேர்ந்த க. வேலாயுதம் என்பவர், காங்கிரஸ், பிற்போக்குவாதிகளின் நிலயமாக மாறிக்கொண்டு வருவதினாலும், தி. மு. கழகம், கழகக் கட்டுப்பாடுடனும், சட்ட திட்டத்துடனும் பணியாற்றி வருவதாலும், திராவிட மக்களுக்கு இந்த கழகத்தினால்தான் விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையாலும் காங்கிரசிலிருந்து விலகி, கள்ளக்குறிச்சி வட்டத்தில் சென்ற வாரத்தில் நான்கு கிராமங்களில் தி. மு. கழகக் கிளைத் திறக்கவும், மூன்று ஊர்களில் பொதுக்கூட்டம் நடத்தவும் முன்னணியாளராக இருந்து பெரும் பங்கு கொண்டதுடன் சிறுவாங்கூர் தி. மு. கழகச் செயலாளராகவும் பொறுப்பு ஏற்றுக்கொண்டு இருக்கிறார்.

12 நாள் இடைவிடாது 'பியானோ' வாசித்த ஜெர்மானியர்

1000 சிகரெட், 300 புட்டி இலகு போதை மதுபானம் தேவைப்பட்டது

பெர்லின், நவ. 30—

51 வயதுடைய ஜெர்மானியரான ஹென்ஸ் அதெண்டாஸ் என்பவர் தொடர்ந்தாற்போல் 12 நாட்கள் இடைவிடாது 'பியானோ' வாசித்தார். இன்று காலை 5 மணிக்குத்தான் வாசிப்பதை நிறுத்தினார். இந்தச் சம்பவம் மேற்கு பெர்லின் நகரில் ஒரு உணவு விடுதியில் நடைபெற்றது.

இந்த நாட்களில் அவரால் தீர்க்கப்பட்ட சிகரெட்டுகள் மொத்தம் 1000; இலகுவான போதையைத் தருகிற 300 மதுபான புட்டிகளைக் குடித்து ஒழித்து இருக்கிறார்!

உலகிலேயே அந்தகரான முதல் மக்கள் சபை உறுப்பினர்

கல்கத்தா, நவ. 30—

கண் பார்வை இழந்த ஒருவர் பார்லிமெண்ட் உறுப்பினராகப் பதவி வகிக்க சேர்ந்திருப்பது, இப்போது உலகிலேயே முதன் முதலாக மேற்கு வங்கத்தில் ஷ்யாம பிரசாத் முகர்ஜியின் ஸ்தானத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ சாதன் குப்தாவாகும்.

திரு வி. க. படிப்பகம்

திருப்பூர் கருவம்பாளையம் திரு வி. க. படிப்பகத்தின் நிர்வாகிகள் தேர்தல் 28—11—53 இரவு 9 மணிக்கு நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் கிருஷ்ணன் தலைவராகவும், ஆர். எம். சாமி துணைத் தலைவராகவும், கே. லெனின் செயலாளராகவும், தி. ரங்கசாமி துணைச் செயலாளராகவும், ஆர். ராசப்பன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திராவிடர் ஆரம்பப் பள்ளி

உடுமலையை அடுத்த சாமராயபட்டியில் 23—11—53ல், அவ்வூர்ப் பெரியோர்களின் ஆதரவில், தோழர் இராமசாமி (சிக்கு பொன்னு செட்டியார்) தலைமையில் 'திராவிடர் ஆரம்பப் பள்ளி' துவக்கப்பட்டது. தோழர் பரமசிவம் அதன் ஆசிரியராகப் பணியாற்ற ஒப்புக் கொண்டார்.

ஆதிதிராவிட மகாஜன சங்கம்

பம்பாய், நவ. 30—

காட்டேர் ஆதிதிராவிட மகாஜன சங்க கமிட்டிக் கூட்டம் 29—11—53ல், வள்ளுவர் படிப்பகத்தில், தோழர் பு. கன்னி தலைமையில் கூடியது. தோழர்கள் கே ஆர். நடராசன், கே. கே குமார், ஏ வி. கண்ணையா, என். எம். மாரிமுத்து, டி. சின்னசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (36, ஆதியப்ப நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: கி. [illegible]